

கழக பொருளாளரும், முன்னாள் ஒன்றிய அமைச்சருமான டி.ஆர்.பாலு எம்.பி. அவர்களின் துணைவியாரும் தொழில்நுட்ப அணி செயலாளரும், தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சருமான டி.ஆர்.பி.ராஜாவின் தாயாருமான திருமதி ரேணுகா தேவி அவர்கள் மறைவையொட்டி சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் கழகத் துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி., அவர்கள் நேரில் சென்று அம்மையாரின் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து ஆறுதல் கூறினார்.

கடன் சார்ந்த திட்டங்களின் கீழ்

தமிழ்நாட்டில் வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு?

மக்களவையில் - கழக உறுப்பினர் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, ஆக.22

ஒன்றிய அரசின் பல்வேறு கடன் சார்ந்த திட்டங்களின் மூலம் தமிழ்நாட்டில் அனும திக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன்கள் எவ்வளவு என்று திருவண்ணா மலை தொகுதி உறுப்பினர் சி.என்.அண்ணா துரை கேள்வி எழுப்பினார்.

அவரது கேள்விகள் வரு மாறு:-

(அ) தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஜன் சமர்த் போர்ட்டலை அரசு செயல்படுத்தியுள்ளதா?

(ஆ) அப்படியானால், இந்த இணையதளம் தொடங்கப்பட் டதிலிருந்து தமிழ்நாட்டிலிருந்து அதன் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட மொத்த கடன் விண்ணப்பங் களின் எண்ணிக்கை;

(இ) பல்வேறு கடன் சார்ந்த திட்டங்களின் கீழ் தமிழ்நாட் டில் பயனாளிகளுக்கு அனும திக்கப்பட்டு வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை;

(ஈ) தமிழ்நாட்டில் மாவட்ட வாரியாக பயனாளிகளின்

எண்ணிக்கை மற்றும் ஒவ் வொரு திட்டத்தின் கீழும் வழங்கப்பட்ட தொடர்புடைய தொகை;

(உ) தமிழ்நாடு பயனாளி கள் போர்டல் மூலம் அணுகும் திட்டங்களின் வகை வாரியான (விவசாயம், கல்வி, வணிகம், முதலியன) விவரங்கள்; மற்றும்

(ஊ) மாநிலத்தில் உள்ள கிராமப்புற மற்றும் பின்தங்கிய மக்களிடையே டிஜிட்டல் விழிப்புணர்வையும் போர்ட் டலை அணுகுவதையும் மேம் படுத்த அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா, அப்படியானால், அதன் விவ ரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கள் எழுப்பினார்.

அதற்கு ஒன்றிய நிதி அமைச்சக இணை அமைச்சர் பதிலளித்துள்ளார்.

சேலம் சிறையில் 1950 ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வில் சுட்டுக் கொல்லப்பட்ட 22 பேரின் நினைவாக நினைவு மணிமண்டபம் அமைக்கப்படும் என தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சேலத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அறிவித்ததை தொடர்ந்து, சேலம். அஸ்தம்பட்டி புதிய நீதிமன்ற வளாகத்திற்கு எதிரே மணிமண் டபம் அமைப்பதற்கான இடம் தேர்வு குறித்து சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் , மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி, முன்னிலையில் நேற்று (21.08.2025) ஆய்வு மேற்கொண்டார் கள். உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .இரா.ரவிக்குமார், சேலம் வருவாய் கோட்டாட்சியர் திருமதி அபிநயா, சேலம் வட்டாட்சியர் பார்த்த சாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

கடந்த 30.1.2025 சென்னை தலைமை செயலகத்தில் முதல்வர் அவர்கள் தலைமையில் கூடலூர் பிரச் சனைகள் குறித்து ஆலோசிக்கப்பட்ட கூட்ட முடிவுகள் மற்றும் கூடலூர் சட்டமன்ற தொகுதியில் நிலுவை யிலுள்ள நிலபிரச்னைகள், மனித வன விலங்கு மோதல் உள்ளிட்ட முக்கிய பிரச்சனைகளுக்கு தீர்வு காண வலியுறுத்தி, நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜ் தலைமையில், கூடலூர் தொகுதியை சார்ந்த திமுகதோழமை கட்சி நிர்வாகிகள் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களை சந்தித்து ஆலோசனை மேற்கொண்டனர். உடன் மாவட்ட அவை தலைவர் போஜன், மாவட்ட துணை செயலாளர் ரவிகுமார், மாவட்ட பொருளாளர் நாசர் அலி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் திராவிடமணி , தம்பி இஸ்மாயில், கூடலூர் நகர செயலாளர் இளஞ்செழியன்,தலைமை கழக சொற்பொழிவாளர் கூடலூர் பாண்டியராஜ், சி.பி.எம் மூத்த தலைவர் வாசு, காங்கிரஸ் சபி, விடுதலை சிறுத்தைகள் கட்சி சகாதேவன், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் அனீபா, நாசர் ஆகியோர் உள்ளனர்.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர் ஏ.பி.நந்தகுமார் தலைமையில் தஞ்சாவூர் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடர்பாக துறை அலுவலர்களுடன் ஆய்வு செய்து பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சியர் பா.பிரியங்கா பங்கஜம், குழு உறுப்பினர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், துரை.சந்திரசேகரன், முனைவர்.எம்.எச்.ஜவாஹிருல்லா, மு.பெ.கிரி, ம.சிந்தனை செல்வன், வி.பி.நாகைமாலி, ஒய்.பிரகாஷ், முதன்மை செயலாளர் முனைவர் கி.சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், என்.அசோக்குமார், மாநகராட்சி மேயர்கள் சண்.இராமநாதன், க.சரவணன், மாநகராட்சி துணை மேயர்கள் மரு.அஞ்சுகம் பூபதி, சுப.தமிழழகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் இரா.இராஜாராம், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

கோவை மாநகர் மாவட்டம், சிங்காநல்லூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட மத்திய மண்டலம், பாப்பநாயக்கன் பாளையம் பகுதி, வார்டு எண் : 48, பாலாஜி நகர் பகுதியில் ரூபாய் 48 இலட்சம் மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், மாநகராட்சி மத்திய மண்டலத்தலைவர் மீனா லோகு துவக்கி வைத்தனர். இதில் பாப்பநாயக்கன் பாளையம் பகுதி பொறுப்பாளர் மா.நாகராஜ், வட்டக் கழக செயலாளர்கள் மு.சசிகுமார், எஸ்.ஜெபமாலை தாஸ், 48 வது வார்டு மாமன்ற உறுப்பினர் பிரபாவதி மற்றும் கேபிள் ராஜேந்திரன், வ.விஜய், சி.முருகன், அ. காளிதாஸ், தம்பு.மோகன், பிரகாஷ், ஸ்ரீபிரியா, கல்பனா ,உமா ரேணுகா, இன்பசேகர், பாபு மகேந்திரன், சிபிஜ மோகன்ராஜ், ரவீந்திரன், மெஸாகண்ணன், ரவி ராஜன், பழனிசாமி, கேபிள் சிவா, ஞானமூர்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆணைக்கட்டிப்பாளையம், கூனவேலம்பட்டியில் நாடாளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் ரூ.2.20 கோடி மதிப்பில் இராசிபுரம் அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகத்திற்கு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் கலந்து கொண்டு அடிக்கல் நாட்டி, நலத்திட்ட உதவிகளை வழங்கினார். விழாவில் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்ட கழக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார், பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் கி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்), ஒன்றிய கழகச் செயலாளர்கள் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.கஸ்டாலினின் சீரிய திட்டங்களால்

1,834 மெ.டன்னாக இருந்த பட்டு நூல் உற்பத்தி தற்போது, 2,728 மெ.டன்னாக உயர்ந்துள்ளது!

எம்.பி, தொகுதி நிதியில் ரூ.2.20 கோடி மதிப்பில் அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகம் அடிக்கல் நாட்டி – அமைச்சர் தா.மோ.அன்பரசன் பெருமிதம்!

நாமக்கல், ஆக. 23 –

நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஆணைக்கட்டிப்பாளையம், கூன வேலம்பட்டியில் மாநிலங்க ளவை உறுப்பினர் தொகுதி மேம் பாட்டு நிதியின் கீழ் ரூ.2.20 கோடி மதிப்பில் இராசிபுரம் அரசு பட்டுக்கூடு அங்காடி வளாகத் திற்கு அடிக்கல் நாட்டு விழா நடை பெற்றது. மாவட்ட ஆட்சித்தலை வர் துர்கா மூர்த்தி தலைமை தாங்கினார்.

ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதி வேந்தன்,நாடாளுமன்ற மாநிலங் களவை உறுப்பினர்/ நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டு றவு வங்கித் தலைவர் கே.ஆர்.என்.இராஜேஸ் குமார், பட்டு வளர்ச்சித்துறை இயக்குநர் கி.சாந்தி, சட்டமன்ற உறுப்பினர்கள் பெ.ராமலிங்கம் (நாமக்கல்), கு.பொன்னுசாமி (சேந்தமங்கலம்) ஆகியோர் முன் னிலை வகித்தனர்.

அமைச்சர் தா.மோ.அன்பரசன் பேச்சு!

விழாவில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்ப ரசன் கலந்துகொண்டு அடிக்கல் நாட்டி, பேசும் போது,

கிராமப்புற மக்களுக்கும், சுய தொழில் செய்யும் மகளிருக்கும், இளைஞர்களுக்கும், வேலை வாய்ப்பையும், வருமானத்தையும் வழங்கும் தொழிலாக பட்டு வளர்ப்பு தொழில் உள்ளது. தமி ழக மக்களின் பராம்பரிய உடை யாக திகழ்வது பட்டு என்பதை யாரும் மறுக்க முடியாது.

பட்டு நூல் உற்பத்தியில் நாம் தன்நிறைவு அடையவும், நமது பட்டு நூல் தேவையை நாமே பூர்த்தி செய்து கொள்வதும் மாண் புமிகு முதல்வர் அவர்கள் மிகவும் முக்கியம். பட்டுத் தொழிலை வளர்க்கவும், பட்டு உற்பத்தியை பெருக்கவும், எண்ணற்ற பல திட் டங்களை செயல்படுத்தி பட்டு விவசாயிகளுக்கு ஆண்டுதோ றும் நலத்திட்ட உதவிகளை வழங்கி வருகிறார். இன்று இந்த விழாவில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த 152 பட்டு விவசாயிக ளுக்கு ரூ.93.28 இலட்சம் மதிப் பில் பண்ணை உபகரணங்கள் மற்றும் தளவாட பொருட்களும், பட்டுப்புழு வளர்ப்பு மனை மானி யம், மல்பெரி நடவு செய்து பட்டுப் புழு வளர்ப்புமனை அமைத்த விவசாயிகளுக்கு ஊக்கத் தொகை மற்றும் 75 முன்னோடி பட்டு விவசாயிகளுக்கு பாராட்டுச் சான்றிதழும் வழங்கப்படுகிறது.

நாமக்கல் மாவட்டம் இராசிபு ரத்தில் பட்டுக்கூடு அங்காடி 2021 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. இந்த அங்காடி மூலம், கடந்த 4 ஆண்டுகளில் 385 மெட் ரிக் டன் பட்டுக்கூடுகள் ரூ.16.50 கோடி மதிப்பில் வர்த்தகம் செய் யப்பட்டுள்ளது. இந்த அங்கா டிக்கு பட்டுக்கூடுகள் வரத்து அதிக ரித்து அதனை கையாளவும், வரும் நிலையில் பட்டு விவசாயிகளுக்கு நல்ல விலை கிடைத்திட வும், இராசிபுரம் ஒருங் கிணைந்த பட்டுக்கூடு அங்காடி அடிக்கல் நாட்டு விழா நாமக்கல் மாவட்ட பட்டு விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று மாண்பு மிகு முதல்வர் அவர்கள் புதிய ஒருங்கிணைந்த பட்டுக்கூடு அங் காடி அமைக்கப்படும் என கடந்த தேர்தலின் போது வாக்குறுதி அளித்தார்.

அதனை தொடர்ந்து, மாநிலங் களவை உறுப்பினர் கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தொகுதி மேம் பாட்டு நிதியிலிருந்து, ரூ.2.20 கோடி மதிப்பில் இராசிபுரத்தில் ஒருங்கிணைந்த பட்டுக்கூடு அங் காடி வளாகம் அமைக்க அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. அவருக்கு என் நன்றியை தெரிவித்துக் கொள்கி றேன். இந்த அங்காடியின் மூலம் நாமக்கல், கரூர், திண்டுக்கல், திருச்சி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர் மாவட்டங் களை சார்ந்த சுமார் 4000 க்கும் மேற்பட்ட பட்டு விவசாயிகள் தங்க ளது பட்டுக்கூடுகளை விற்று பயன் அடையலாம்.

தமிழ்நாட்டின் மிகப் பெரிய தருமபுரி அரசு பட்டுக்கூடு அங்கா டியை ரூ.19.20 கோடி மதிப்பில் ஒருங்கிணைந்த பட்டுக்கூடு அங் காடி வளாகமாக தரம் உயர்த்திட, தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் 17.08.2025 அன்று பணியினை தொடங்கி வைத்தார்கள். தென்மாவட்ட பட்டு விவசாயிகளின் நலனுக்காக தேனியில் ரூ.3.50 கோடிமதிப் பில் புதிதாக பட்டுக்கூடு அங்காடி வளாகம் அமைக்கப்பட உள்ளது என்பதையும் பெருமையுடன் தெரிவித்து கொள்கிறேன். நாமக் கல் மாவட்டத்தை பொறுத்தவரை கடந்த 4 ஆண்டு காலத்தில் மல் பெரி நடவு, பட்டுப்புழு வளர்ப்பு மற்றும் விதக் கூடு உற்பத்தி மானி யம், நவீன தளவாடங்கள் என 2,230 பட்டு விவசாயிகளுக்கு ரூ.14.90 கோடி மானியம் வழங் கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவ தும்16,313பட்டுவிவசாயிகளுக்கு ரூ.183.16 கோடி மானியமாக வழங்கப்பட்டுள்ளது என மகிழ்ச்சி யோடு தெரிவித்துக் கொள்கி றேன்.

மல்பெரி நடவு செய்யும் விவ சாயிகளுக்கு 3,500 ஏக்கருக்கு வழங்கப்பட்ட ஊக்கத் தொகை கழக அரசு பொறுப்பேற்ற பின் 6,500 ஏக்கராக உயர்த்தி வழங் கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ், இதுவரை 23,562 ஏக்கர் பரப்பள வில் மல்பெரி நடவு செய்த 15,201 விவசாயிகளுக்கு ரூ.37.14 கோடி மானியம் வழங்கப்பட்டுள்ளது. 800 விவசாயிகளுக்கு வழங்கப் பட்டு வந்த பட்டு புழு வளர்ப்பு மனை மானியம், 1,500 பட்டு விவ சாயி களுக்கு உயர்த்தி வழங்கப் பட்டது. நடப்பாண்டு முதல் இந்த மானியம் 3050 பட்டு விவசாயி களாக உயர்த்தி வழங்கப்படுகி றது. இதற்காக வழங்கப்பட்டு வந்த மானியத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர் கள் ரூ.87,500ல் இருந்து ரூ.1.20 இலட்சமாக உயர்த்தி வழங்கி னார். இந்த திட்டத்தின் கீழ் இது வரை, 5,332 விவ சாயிகளுக்கு ரூ.90.23 கோடி மானியம் வழங் கப்பட்டு உள்ளது.

பட்டு விவசாயிகளின் நீண்ட நாள் கோரிக்கையினை ஏற்று, கழக அரசு பவர் டில்லர் இயந்தி ரங்களை வழங்கி வருகிறது. இது வரை 1,050 முன்னோடி பட்டு விவசாயி களுக்கு ரூ.3.68 கோடி மதிப்பில் பவர் டில்லர் இயந்திரங் கள் வழங்கப்பட்டுள்ளது.

பட்டுப்புழு வளர்ப்பு விவசாயி களின் செலவினை குறைத்து வருமானத்தை உயர்த்திட 7,870 பட்டு விவசாயிகளுக்கு ரூ.39.10 கோடி மதிப்பிலான நவீன பட்டுப் புழு வளர்ப்பு இயந்திரங்களும், உபகரணங்களும் வழங்கப்பட டுள்ளது. வெண்பட்டு முட்டை களை பதனம் செய்து ஆண்டு முழுவதும் விநியோகம் செய்திட 1 கோடி வெண்பட்டு முட்டைகள் பத னம் செய்யும் குளிர்பதன கிடங்கு ரூ.4 கோடி மதிப்பில் ஓசூரில் அமைக்கப்பட்டுள்ளது. பட்டுக் கூடுகளை பட்டு நூலாக நூற்பு செய்திட 8 தானியங்கி பட்டு நூற்பு ஆலைகள் அமைக்க ரூ.8.52 கோடி, 15 பட்டு முறு க் கேற்றும் ஆலைகள் அமைக்க ரூ.98.90 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

1,834 மெட்ரிக் டன்னாக இருந்த பட்டு நூல் உற்பத்தி, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்க ளின் சீரிய திட்டங்களால், தற் போது, 2, 728 மெட்ரிக் டன்னாக உயர்ந்துள்ளது என்பதை பெரு மையுடன் தெரிவித்துக் கொண்டு, தமிழ்நாடு தனக்கு தேவையான பட்டுநூலை தானே உற்பத்தி செய்து பட்டுநூல் உற்பத்தியில் தன்னிறைவு பெறும் என குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தெரிவித்த தார்.

அமைச்சர் மா.மதிவேந்தன் பேச்சு!

அமைச்சர் மருத்துவர் மா.மதி வேந்தன் விழாவில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் பேசுகை யில்,

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் பட்டு விவசா யிகளின் நலன் கருதி பல்வேறு திட்டங்களை அறிவித்து செயல்ப டுத்தி வருகிறார். அந்த வகையில் நாமக்கல் மாவட்டத்தில் பட்டு விவ சாயிகளுக்கு பட்டுவளர்ச்சித்து றையின் மூலம் மல்பெரி நடவு மல்பெரி நாற்று உற்பத்தி, தனிபட் டுப்புழு வளர்ப்புமனை, விதைக் கூடு உற்பத்தி, சொட்டுநீர் பாச னம், புழு வளர்ப்புதள வாடங்கள், உபகரணங்கள், மானிய உதவி உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் தொடர்ந்து வழங் கப்பட்டு வருகிறது.

மேலும், பட்டுக்கூடு அங்காடி தொடங்கப்பட்டதில் இருந்து, நாளது வரை ரூ.16.49 கோடி மதிப்பில் பட்டுக்கூடுகள் விற் பனை செய்யப்பட்டுள்ளது. பட்டுக் கூடுகள் விற் பனை செய்ததன் மூலம் தீர்வை (லெவி) தொகை யாக, ரூ.25 இலட்சம் அரசுக்கு வருவாய் ஈட்டும் அளவிற்கு நாமக்கல் மாவட்ட பட்டு வளர்ச்சித் துறை உயர்ந்துள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் கூட்டு றவு பால் உற்பத்தியாளர்கள் மற் றும் நகர்வோர் நலன் கருதி அனைத்து வசதிகளுடன் கூடிய 2.0 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட ரூ.90.00 கோடி மதிப் பிட்டிலான தானிங்கி நவீன பால் பண்ணை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதன் மூலம் நாமக்கல் மாவட்டத்தில் உள்ள 15,000 பால் உற்பத்தியா ளர்கள் மற்றும் சுமார் 4 இலட்சம் நுகர்வோர் பயனடைவர். நாமக் கல் மாவட்டத்தில் மாவட்ட மத்தி யக் கூட்டுறவு வங்கியின் மூலம் விவசாயிகளுக்கு எவ்வித தாமத முமின்றி உடனடியாக கடனுதவி கள் வழங்கப்பட்டு வருகிறது. தமிழ்நாடு முதலமைச்சர் அவர் கள் விவசாயிகளின் வாழ்வு மேம் பட இதுபோன்ற எண்ணற்ற திட் டங்களை செயல்படுத்தி வரு கிறார்கள் என ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழ கச் செயலாளர்கள் கே.பி.இராம சுவாமி, ஜெகநாதன், ஆர்.எம். துரைசாமி, எம்.பி.கௌதம், டி.ஜெயபிரகாஷ், மாவட்ட வளர்ச்சி மேலாளர் (நபார்டு) டாக் டர் வெ.சுபாஷ், இணை இயக்கு நர், பட்டுவளர்ச்சித்துறை சேலம் இல.சந்திரசேகரன், விஞ்ஞானி கள்–பி. மோ.சாரதா (ஆராய்ச்சி விரிவாக்க மையம் மத்திய பட்டு வாரியம் கோபிசெட்டிபாளையம்), செல்வி கே.சௌமியா (மத்திய பட்டு ஆராய்ச்சி (ம) பயிற்சி நிலையம், மைசூரு), உதவி இயக் குநர் (பொ) (பட்டுவளர்ச்சித் துறை) க.நிஷாந்தி உட்பட தொடர் புடைய துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

தி.மு.க. அயலக அணி

மாவட்ட, மாநகர அமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் நியமனம்!

தி.மு.க. அயலக அணிச் செயலாளர் எம்.எம்.அப்துல்லா அறிவிப்பு!

கழகத் தலைவர் அவர்களின் ஆணைப்படி - மாவட்டச் செயலாளர்/ பொறுப்பாளர் ஒப்புதலோடு தி.மு.க. அயலக அணியின் மாவட்ட மற்றும் மாநகரஅமைப்பாளர் - துணை அமைப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

திருப்பூர் வடக்கு மாவட்டம்

அமைப்பாளர் - இராம. முத்துராமன் 35, கொங்கு நகர், 4வது வீதி, திருப்பூர் - 641607.

துணை அமைப்பாளர்கள் - 1) எம். தனசேகரன் 2/257பி, சின்ன தோட்டம், சின்னஒட்டார்பாளையம், அவிநாசி - 638460, திருப்பூர் மாவட்டம். 2) து. ஹரி பிரசாத் 27, நேதாஜி வீதி, குமரானந்தபுரம், திருப்பூர் - 641602. 3) மு. தமிழ்ச்செல் வன் 415/1, சண்முகா நகர், 5வது வீதி, சாமுண்டிபுரம் மேற்கு, காந்தி நகர் அஞ்சல், திருப்பூர் - 641603. 4) நா. பாண்டியன் ஸ்ரீ அம்மன் மெடிக்கல், குருவாயூரப்பன் நகர், வாரணாசிபா ளையம் பிரிவு, வாவிபாளையம், திருப்பூர் - 641666. 5) ரா. திருமூர்த்தி 1/368, ராஜா நகர், பிச்சம்பாளையம் புதூர், திருப் பூர் - 641603.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம்

நாகர்கோவில் மாநகரம்

தலைவர் - மக்கீன் அப்துல்சமது 70, கச்சப்புறத் தெரு, இட லாக்குடி, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

துணைத் தலைவர் - அ.கோ. மகேஷ் 17/1, மீனாட்சி செட் டியார் தெரு, கோட்டார், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட் டம்.

அமைப்பாளர் - தா. சுகின் 6/147, இசட்.சி. வின் நகர், களி யங்காடு, நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

துணை அமைப்பாளர்கள் - 1) முனைவர் ரா. ஆனந்த் 195, சி.பி.எச். ரோடு, கிருஷ்ணன்கோவில், நாகர்கோவில், கன்னி யாகுமரி மாவட்டம். 2) மை. முகம்மது அலி 122/2, இரண் டாம் தெரு, ராஜீவ் நகர், இருளப்பபுரம், கோட்டார், நாகர்கோ வில், கன்னியாகுமரி மாவட்டம். 3) செ. விஷ்ணு 2சி, 11/ஏ, தளியபுரம் ஓட்டுபுரை தெரு, வடசேரி, நாகர்கோவில், கன்னி யாகுமரி மாவட்டம். 4) அஜிந்த் கேப்ரியல் ஜெலஸ்டின் 73பி2, கிறிஸ்து நகர், நாகர்கோவில், கன்னியாகுமரி மாவட்டம்.

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம்

தாம்பரம் மாநகரம்

அமைப்பாளர் - துரை இரா. சிவகுமார் பிளாட் எண். , கதவு எண். 2, கஸ்தூரிபாய் தெரு, சிட்லபாக்கம், சென்னை - 600064.

துணை அமைப்பாளர்கள் - 1) எ.பி. பரதன் 5, ஐஸ்வர்யா நகர், 2வது தெரு 3வது குறுக்குத் தெரு, குரோம்பேட்டை, சென்னை - 600044. 2) வி.ஆர். சங்கர் 15, கரிகாலன் தெரு, துர்கா நகர், தாம்பரம் சானடோரியம், சென்னை - 600044. 3) ஜெயகாந்தன் 50, அயோத்தியம்மன் கோயில் தெரு, அன காபுத்தூர், சென்னை - 600070. 4) முரளி 49, பவந்தியார் தெரு, செம்பாக்கம், சென்னை. 5) தா. முரளி 18/4, குறத்தியம்மன் கோயில் தெரு, படவேட்டம்மன் கோயில் அரு கில், குமாரபுரம்,சென்னை - 600044. 6) இ. ஸ்டாலின் 4, மல்லிகா நகர், பி.வி. வைதியலிங்கம் ரோடு, பழைய பல்லா வரம், சென்னை - 600117.

சேலம் மத்திய மாவட்டம்

சேலம் மத்திய மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்பட்ட சதீஸ்குமார் அருணாசலம் அவர்கள், தான் வகித்து வந்த பொறுப்பிலிருந்து விடுவித்துக் கொண்டதால், அவருக்குப் பதிலாக **ஆர். ராஜாகண்ணு.** (1/86-பி, குடித் தெரு, மேட்டுப்பட்டி &அஞ்சல், புளியம்பட்டி சேலம் மாவட்டம் - 636 455.) சேலம் மத்திய மாவட்ட அயலக அணி அமைப்பாளராக நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள் இவருடன் இணைந்து பணியாற் றிட கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 21-08-2025.

எம்.எம்.அப்துல்லா
செயலாளர்
தி.மு.க.அயலகஅணி.